பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 23 செவ்வாய்க்கிழமை 09.12.2025 கதிர் 031

## இது ரகசியம் அல்ல!



கனமழை, வெள்ளத்தால் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை சகட்டுமேனிக்கு அறிக்கையிட்டுவிட்டு இப்போது ஆப்பிழுத்தகுரங்கின்நிலையில் ☞2

# இழப்பீட்டுக்கு தேவையானதோ ரூ. 300 பில். கைவசம் இருப்பதோ ரூ. 120 பில். மட்டுமே

### ஆளும் தரப்பு என்ன செய்யும் என்கிறார் ராஜித

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசுத்தலைவர்அறிவித்துள்ளஇழப்பீட்டுத் தொகையைவழங்குவதற்குஆளும்தரப்பிற்கு 300 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது. ஆனால்ஆளும்தரப்பின்கைவசம்இருப்பது 120 பில்லியன் ரூபாவாகும். அதனால் ஆளும்தரப்பின் இந்த வாக்குறுதி தேர்தல் கால விசித்திர கதையின் இரண்டாவது தொடராக இருந்துவிடக்கூடாதென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்தார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கொழும்பு அரசியல் காரியாலயத்தில்நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமக்கு தெரிந்த காலத்தில் இருந்து இந்தளவு பெரிய இயற்கைப் பேரிடர் ஏற்பட்டதில்லை. இலங்கை மக்களில் 10 சதவீதமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடுமுழுவதும்மக்கள்பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப்பேரிடரால்பாதிக்கப்பட்டுஉயிரிழந்த மற்றும் காணாமல் போயுள்ளவர்களின் சரியான எண்ணிக்கையை இதுவரை கணக்கிட முடியாமல் போயிருக்கிறது. நாளுக்கு நாள் இறப்பு எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

எமதுகாலத்தில்பலசந்தர்ப்பங்களில் ☞2

## ஐ.நாவின் உதவி கையளிப்பு

பேரிடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உடனடி உதவி நிதியத்தின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள 4.5 மில்லியன் டொலர்கள் நிதியுதவி நேற்றைய தினம் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்ஞ்சேவினால் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

‘தித்வா‘ சூறாவளியினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால் இலங்கை மிகமோசமான பேரழிவுக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கையுடனான உடன்நிற்பை வெளிப்படுத்திவரும் சர்வதேச நாடுகள்மற்றும்அமைப்புக்கள், இலங்கைக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிகளை வழங்கிவருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் நேற்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்ஞ்சேவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது நாட்டின் சமகால நிலவரம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போதுபேரிடரினால்பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு அவசியமான ☞6

## இலங்கையை மீளக்கட்டியெழுப்ப ஆஸ்திரேலியா உதவ வேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் கோரிக்கை

பாதிக்கப்பட்ட வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்ப உதவுங்கள் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயராணையர் மெத்யூ டக்வேர்த்திடம் கோரிக்கை வைத்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இருவருக்கும் இடையில் நடந்த சந்திப்பில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இலங்கையின் தற்போதைய நிலவரம் தொடர்பில் இரு தரப்பினரும் இங்கு பல கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். புயலால் ஏற்பட்ட பேரழிவு காரணமாக தொழில் முயற்சிகள் அழிந்து போனமை, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளமை, பல உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் மற்றும் அவற்றின் அழிவு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது உயராணையருக்கு விளக்கமளித்துள்ளார். ☞2

## ஆளும்தரப்பை விமர்சிப்பவர்களை கைது செய்ய முயற்சிக்கக்கூடாது

### பொது ஜன பெரமுன வலியுறுத்து

இயற்கைப் பேரிடரால் பாரதூரமாகப்பாதிக்கப்பட்டுள்ள மக்கள் துயர் தாங்காது ஆளும்தரப்பின் மீது விமர்சனங்களை முன்வைக்கின்றனர். அவற்றை ஆளும்தரப்பு ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, விமர்சிப்பவர்களை கைது செய்ய முயற்சிக்கக் கூடாது. மக்களின் விமர்சனங்களுக்கு மனித நேயம் மிக்க வகையில் பதிலளிக்க வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன வலியுறுத்தினார்.

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை விமர்சிப்பவர்களைக்கைதுசெய்யவேண்டும் என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல அச்சுறுத்தும் தொனியில் தெரிவித்துள்ளார்.

அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு, அரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, ஆளும்தரப்பின் மீதும் தன் மீதும் தற்போதுமுன்வைக்கப்படும்விமர்சனங்களை ஒருபோதும் கருத்தில் கொள்ளவோ, கவலைப்படவோ போவதில்லை என்று குறிப்பிட்டிருந்தார்.

பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவில் கூற்றுடன் ஒப்பிடுகையில், அரசுத் தலைவரின் கூற்று நியாயமானதாகவும், சாதகமானதாகவும் காணப்படுகிறது. மேலோட்டமாக அவதானித்தால் மாத்திரமே அவ்வாறு தோன்றுகிறது. ஆனால் சற்று அதன் பின்னணியைப் பார்க்கும்போது, அது சுனில் வட்டகலவின் கூற்றைப் போன்றே மோசமானதாகவுள்ளது என்பது ☞2

## கட்சிகள் இணைந்து அடுத்த கட்டம் செல்வது தொடர்பிலேயே சந்திப்பு

### தமிழ் அரசுக் கட்சியுடனான பேச்சு குறித்து சித்தார்த்தன் விளக்கம்

தமிழ் தேசியத்தின் பால் செயற்படும் அனைத்து தமிழ் கட்சிகளையும் இணைத்து செயற்படுத்துவதை நாம் விரும்புகின்றோம் இதற்காக ஏற்கனவே இணைந்து செயற்படும் கட்சிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். அவ்வாறே தற்போது அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்வதற்காக சந்திப்புகள் இடம்பெற்றுவருகிறதென ☞2

## அம்பிட்டிய சுமண ரத்ன தேரரை டிசெ. 15க்கு முன் கைது செய்க

### மட்டு. நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு

‘தமிழ்மக்களைவெட்டிக்கொல்லவேண்டும்’ எனக் கூறிய அம்பிட்டிய சுமண ரத்ன தேரரை டிசெம்பர் 15க்கு முன்பாகக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் கைது செய்யுமாறு பரிந்துரைக்கப்பட்ட அவரை இதுவரை ஏன் கைது செய்யவில்லை என்றும் நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. அவர் கைது செய்யப்படாமை தொடர்பான மூத்தபொலிஸ்அத்தியட்சகரின்அறிக்கையைநீதிமன்றத்திற்கு அளிக்கை செய்யுமாறும் நீதிவான் கட்டளையிட்டார்.

அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் 2023-10-23 அன்று ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலின்போது வடக்கில் உள்ளதமிழ்மக்களையும்தெற்கில்உள்ளதமிழ்மக்களையும் வெட்டிக் கொல்லவேண்டும் எனத் தெரிவித்திருந்தார். இதையடுத்து அவரது இந்த வன்முறையான கருத்துக்கு எதிராக 2023-10-27 அன்று கொழும்பு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் சட்டத்தரணி தனுக்க றனஞ்சக என்பவர் முறைப்பாடு செய்தார். சிவில் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைக்கு அமைவான சட்டத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்தார். இந்த வழக்குத் தொடர்பான கோப்புகள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்ட நிலையில் கடந்த மாதம் சட்டமா அதிபர் திணைக்களம் தேரரைக் கைது செய்து சட்ட நடவடிக்கையைத் தொடருமாறு அறிவுறுத்தல் வழங்கியது.

இந்த நிலையில் வழக்கு நேற்றுத் திங்கட்கிழமை ☞2

## பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வேடிக்கை பார்க்கச் செல்லவேண்டாம்

### இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் அறிவுறுத்து

பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செல்வது மிகவும் ஆபத்தானது ஆகவே அப்பகுதிகளுக்கு வேடிக்கை பார்க்கச் செல்வதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டுமென பேரிடர் முகாமைத்துவ மையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கோரிக்கை விடுத்துள்ளார்.

இடர் முகாமைத்துவ அமைச்சில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நிலமை சீராக காணப்பட்டாலும், தண்ணீர் அதிகமான நீரோட்டத்துடன் பாய்வதால், பொதுமக்கள் நீர் நிலைகளில் குளிப்பதையோ அல்லது வேடிக்கை பார்ப்பதையோ தவிர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது உதவிப் ☞6

## உதவிகளைச் சரிவர வழங்க தேசிய கண்காணிப்புக் குழு

நாட்டில் கடந்த வாரம் ‘தித்வா’ புயலால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் சுமார் 20 இலட்சத்துக்கும் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல்வேறு நாடுகளிலிருந்தும் தொடர்ச்சியாக உதவிகள் கிடைக்கின்றன.

அந்த மனிதாபிமான உதவிகள் சரியான முறையில் ஒருங்கிணைக்கப்பட்டு மக்களிடம் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக ஓர் உயர்மட்ட தேசியக் கண்காணிப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தவிக்கிறார்கள் யாழ். மாவட்ட அதிகாரிகள்.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிடாமல் அலுவலகத்தில் இருந்தபடி ஒரு உத்தேச பாதிப்பு மதிப்பீட்டை வழக்கம் போலவே அதிகாரிகள் வழங்கியிருக்கின்றனர் என்பதும் சில இடங்களில் ஆளும்தரப்பு அரசியல்வாதிகள் வழங்கிய நெருக்குதலின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கின்றது என்பதும் இப்போது மெல்ல மெல்ல வெளிவரத் தொடங்குகின்றது.

அரசஅலுவலர்கள்மட்டத்திலேயேஇதுஒரு பெரும் பிரச்சினையாக மாறியிருக்கின்றது. பாதிப்பு விவரத்துக்கான பொறுப்பை மாவட்டச்செயலர் பிரதேச செயலர்களின் மீது சுமத்துகிறார், பிரதேச செயலர்களோ அதனை கிராம அலுவலர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திஅலுவலர்கள்மீதுசுமத்துகிறார்கள். இதனால் தரவுப் பிழைகளுக்கான முதல் அடி கிராம அலுவலர்கள் மீதும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் மீதுமே விழுகிறது.

அதனால் பல இடங்களிலும் இப்போது வெள்ளப் பாதிப்புத் தொடர்பான தரவுப் பத்திரத்தில் கையெழுத்திடமாட்டோம் என்று கிராம அலுவலர்களும் பொருளாதார அலுவலர்களும் முரண்டு பிடிக்கிறார்கள். அதிலும் குறிப்பாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள், இடம்பெயர்ந்தவர்கள் என்கிற ரீதியில் உதவிப் பொருள்களைப் பெறுவதற்கு வேண்டுமானால் பரிந்துரைக்க முடியுமே தவிர பெரும்பாலானவர்களுக்கு வீடுகளைக் கழுவிச் சுத்தப்படுத்துவதற்கான பரிந்துரைய வழங்க முடியாது என்பதில் அவர்கள் பிடிவாதமாக நிற்கின்றார்கள்.

அதில் இருக்கும் மற்றொரு பிரச்சினை, யாழ். மாவட்டத்தில் ஒரு சில நாட்கள் மட்டுமே பெரும்பாலான இடங்களில் வெள்ளம் தேங்கி நின்றது. ஆனால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம்காண்பதற்கானஅறிவுறுத்தல்கள் என்னவோ ஐந்தாறு நாட்கள் கழித்தே அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் ஆறேழு நாட்கள் கடந்து அதிகாரிகள் களப் பயணம் சென்றால் எந்தெந்த வீடுகளுக்குள் வெள்ளம் வந்தது என்பதை அவர்களால் உறுதிப்படுத்த முடியவில்லை. அதற்கான ஆதாரங்களையும் அவர்களால் திரட்டமுடியவில்லை. இதனால் தாழ் நிலப் பகுதிகளில்கூட உண்மையில் யார் வீட்டுக்குள் வெள்ளம் வந்தது, யார் வீடுகளுக்குள்வெள்ளம்வரவில்லைஎன்பதை உறுதிப்படுத்த முடியாமல் அலுவலர்கள் இப்போது திணறுகிறார்கள்.

நனைந்த மெத்தைகள், தண்ணீரில் ஊறிப்போன சில புத்தகங்கள், தூக்கி ஓரமாகப் போடப்பட்ட சில உபயோகமற்ற பொருட்கள் என்பவற்றை ஆதாரமாகக் காட்டி தங்கள் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது, அதனால் அவற்றை நாங்கள் துப்புரவு செய்துள்ளோம், எனவே 25 ஆயிரம் ரூபா தங்களுக்குத் தரப்படவேண்டும்என்றுமக்கள்கேட்கிறார்கள். இதை நம்பி எப்படி உறுதிப்படுத்துவது என்று தெரியாமல் அலுவலர்கள் திணறுகிறார்கள். மக்கள் சொல்வதைக் கேட்டு உறுதிப்படுத்திவிட்டால் பின்னர் தங்கள் மீது ஏதும் சட்ட நடவடிக்கைகள் பாயுமோ தமது வேலைக்கே ஆபத்து வந்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சுகின்றார்கள்.

இதனால், பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலைத் தயாரித்துவிட்ட சில பிரதேச செயலகங்கள்கூட அவற்றைக் காட்சிப்படுத்த அஞ்சி உள்ளேயே மூடி வைத்திருக்கிறார்கள் என்பதையும் அறியமுடிந்தது. பட்டியலைக் காட்சிப்படுத்திவிட்டால் ஏன் எனக்குத் தரவில்லை, உனக்குத் தரவில்லை என்கிற சண்டை பெரிதாக வெடிக்குமோ என்கிற அச்சம்தான் அதற்குக் காரணம்.

இந்த நிலையில், யாழ். மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள் என்று மாவட்டச்செயலகம் வழங்கிய அறிக்கைக்குக் கொஞ்சமும்நெருக்கமாகக்கூட உண்மையான தரவுகள் வரமுடியாது என்று இப்போது அதிகாரிகள் நம்புகின்றார்கள். உண்மையில் பாதிக்கப்பட்டோர்என்றுஅதிகாரிகள் இனிமேல் வெளியிடவுள்ள அறிக்கைக்கும் அவர்கள் ஏற்கனவே வெளியிட்ட அறிக்கைக்கும் இடையில் உள்ள இடைவெளியை எப்படி நியாயப்படுத்தப் போகிறார்கள் என்பதில் வெடிக்கக் காத்திருக்கிறது மற்றொரு சர்ச்சை.

பிரச்சினை இதனுடன் மட்டும் நிற்கப் போவதில்லை, வீடு சேதமடைந்ததற்கான கொடுப்பனவு, விவசாய மற்றும் கால்நடை அழிவுகளுக்கான கொடுப்பனவு, வர்த்தக மற்றும் தொழில் முயற்சி சேதமடைந்தமைக்கான கொடுப்பனவுகள் என்று தொடர்ந்தும் வழங்கப்படவேண்டிய இழப்பீட்டுப் பட்டியல் பெரியது. புயல், மழை, வெள்ளம் என்பவற்றால் இவற்றுக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பிடுவது ஒருபுறமிருக்க, இவற்றில் பதிவு செய்யப்பட்டாத விவசாய, கால்நடை அழிவுகள் மற்றும் வர்த்தக, உற்பத்தி நிறுவனங்களுக்கு ஏற்பட்ட உண்மையான பாதிப்புக்களுக்கு எப்படி இழப்பீடு வழங்குவது என்கிற பிரச்சினையும் பூதாகரமாக எழுவதற்குக் காத்திருக்கின்றது.

மொத்தத்தில் 'தித்வா' புயல் வடக்கில் ஏற்படுத்திய மிகப் பெரிய பாதிப்பு அரச அலுவலர்கள் மத்தியில் ஏற்படுத்தப்போகும் மன நெருக்கீடுகளும் அச்சுமாகத்தான் இருக்கப்போகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## இழப்பீட்டுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பில்வளிமண்டலவியல்திணைக்களம் எதிர்வு கூறும்போது, நாங்கள் அதற்குத் தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம். அதனால் வெள்ளப்பெருக்கு, சூறாவழி, மணிசரிவு போன்றபேரிடர்களால்ஏற்படும்ஆபத்துக்களை எம்மால் குறைக்க முடியுமாகி இருந்தது.

அதேபோன்று தற்போது இடம்பெற்ற பேரிடர் தொடர்பில் இரண்டு வாரங்களுக்கு முன்னரேவளிமண்டலவியல்திணைக்களம் இது தொடர்பில் பல தடவைகள் எதிர்வுகூறி இருக்கின்றது. அதேபோன்று சர்வதேச ஊடகமான சி.என்.என். எமது நாட்டுக்கு 500 மில்லி மீற்றர் வரை மழை பெய்யும் என நவம்பர் 25 அறிவித்திருந்தது.

காலநிலை அவதான நிலையம் மற்றும் சர்வதேச ஊடகங்களின் எதிர்வுகூறல்கள் தொடர்பில் ஆளும்தரப்பு செயற்பட்டு, முன்னேற்பாடுகளை மேற்கொண்டிருந்தால், தற்போது ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளில் நூற்றுக்கு 80 வீதத்தைக் குறைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் ஆளும்தரப்பு அவ்வாறு செயற்படத் தவறி இருக்கிறது. போதிய அனுபவமின்மையே இதற்குக் காரணமாகும்.

அதேநேரம் பாதி க்கப்பட்ட மற்றும் பேரிடரால் உயிரிழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்குவதாக ஆளும்தரப்பு அறிவித்திருக்கிறது. அதேநேரம்பாதிப்புகளுக்கு அமைய எவ்வளவு தொகை இழப்பீடாக வழகப்போகிறோம் என்ற அளவையும் அரசுத் தலைவர் அறிவித்திருந்தார்.

அரசுத் தலைவர் அறிவித்த பிரகாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமாகஇருந்தால், அதனைநாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அறிவித்துள்ளதன் பிரகாரம் இழப்பீடு வழங்குவதற்கு ஆளும்தரப்பிடம் பணம் இருக்கிறதா என்பதே எமக்குரிய கேள்வியாகும்.

அரசுத் தலைவர் நாடாளுமன்றத்துக்கு வந்து, வழங்கப்போகும்இழப்பீட்டுதொகையை அறிவிக்கும்போது, அது பாதிக்கப்பட்ட மக்களுக்குமனஆறுதலாகவேஇருந்திருக்கும். ஆனால் இவ்வாறு தெரிவித்துவிட்டு அந்த மக்களை ஏமாற்றிவிடக்கூடாது என்றே தெரிவிக்கிறோம்.

அரசுத் தலைவர் அறிவித்த தொகையை பார்க்கும்போது இறந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட வீடுகள், விவசாய நிலங்கள் கால்நடை பண்ணைகள், வியாபார நிலையங்கள், வாகனங்களென அனைத்துக் குமாக மொத்தம் 300 பில்லியன் ரூபாவுக்கும் அதிக நிதி தேவைப்படுகிறது. ஆனால் அரசுத் தலைவர் தெரிவித்துள்ளபடி ஆளும்தரப்பின் கைவசம் இருப்பது 120 பில்லியன் ரூபா மட்டுமே.

120 பில்லியன் ரூபாவை கையில் வைத்துக்கொண்டு300பில்லியன்ரூபாவுக்கு வாக்குறுதி வழங்கி இருக்கிறது. தேர்தல் காலத்திலும்இவ்வாறானவாக்குறுதிகளையே ஆளும்தரப்பு மக்களுக்கு வழங்கி இருந்தது. அந்த விசித்திர கதைகளுக்கு ஏமாந்தே மக்கள் இந்த ஆளும்தரப்பிற்கு வாக்களித்தார்கள். தற்போது அந்தவிசித்திரகதையின் இரண்டாம் கட்டமே அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

அன்று மக்களுக்கு அளித்த வாக்குறுதி, அவர்களின் வாழ்க்கைச்செலவுடன் சம்பந்தப்பட்டதாகும். ஆனால் தற்போதுள்ள வழங்கி இருக்கும் வாக்குறுதி மக்கள் இழந்தவற்றைமீளபெற்றுக்கொடுப்பதற்காகும். அதனால்பாதிக்கப்பட்டமக்கள்ஆளும்தரப்பின் இந்த வாக்குறுதி தொடர்பில் பெரிய நம்பிக்கை வைத்துள்ளனர்.

பேரிடர் காரணமாக எமது நாட்டின் தேசிய உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் நாட்டின் வருமானம் குறைவடைகிறது. இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதி ஆளும்தரப்பின் இரண்டாவது விசித்திர கதையாகிவிடக்கூடாது - என்றார்.

## உதவிகளைச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இயற்கைப் பேரிடரால் இதுவரையில் 22 மாவட்டங்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக பல்வேறு நாடுகளிலிருந்தும் தொடர்ச்சியாக உதவிகள் கிடைத்து வருகின்றன.

பேரிடருக்குப்பின்னரான நடவடிக்கைகள் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சர்வதேச நாடுகளிடமிருந்து கிடைக்கப் பெறும் உதவிகள் முறையாக மக்களைச்சென்றடைய வேண்டும் என அரசுத் தலைவர் அநுரகுமார ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கமையவே இவற்றை முகாமைத் துவம் செய்து கண்காணிப்பதற்காக என்னுடையதலைமையில்உயர்மட்டதேசியக் கண்காணிப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதில் முப்படை மற்றும் பொலிஸ் உட்பட துறைசார் உயர்மட்ட அதிகாரிகளும் உள்ளடங்குவர். உணவு, சுகாதாரம், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுக்கான உபகரணங்கள்மற்றும்மருத்துவம்உள்ளிட்ட பல்வேறு உதவிகள் வெளிநாடுகளிலிருந்து கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இவற்றை எவ்வாறு முகாமைத்துவம் செய்து மக்களுக்கு விநியோகிப்பது என்பதற்கான ஆலோசனை இக்குழுவால் உரிய தரப்பினருக்கு வழங்கப்படும்.

மாகாண ஆளுநர்கள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் என இந்த வலையமைப்பின் கீழ் இடர் உதவிப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

இவை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்படுவதை எமது குழு உறுதி செய்யும். அதற்குக் கொள்கை ரீதியான ஆலோசனைகளும் வழங்கப்படும். வாரத்தில் 3 நாட்கள் இக்குழு கூடி, உதவிப் பணிகள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பது குறித்த அறிக்கையையும் வழங்கும் - என்றார்.

## ஆளும்தரப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவாகிறது.

பொதுமக்களும், தகவல்களை அறிந்த சில தரப்பினரும் இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை விமர்சன ரீதியில் கேள்வி கேட்பதற்குக் காரணங்கள் உள்ளன. எனவே, அரசாங்கத்தால் கேள்வி கேட்பதை ஒருபோதும் தடுக்க முடியாது. ஆளும்தரப்பு இதற்குப் பதிலளிக்க வேண்டும்.

மக்கள் இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் ஆளும்தரப்பிடம் மிகவும் நியாயமான ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள். இந்த மோசமான காலநிலையின்போது ஏற்பட்ட உயிர் மற்றும் உடமை இழப்பைக் குறைக்க அரசாங்கத்தால் இதைவிட அதிகமாகப் பங்களித்திருக்க முடியாதா? என்பதே அந்தக் கேள்வியாகவுள்ளது.

இந்தக் கேள்வி அரசியல் ரீதியானது அல்ல. இந்தக்கேள்விமிகவும்மனிதநேயமானது. இது காரணங்களுடன் கேட்கப்படுகிறது. இதற்குக் காரணம், இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அது தொடர்பான முன்கூட்டிய தகவல்களை வழங்கியிருந்தது.

அது மாத்திரமின்றி அயல்நாடான இந்தியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச வானிலை அவதான நிறுவனங்களும் இந்த மோசமான காலநிலை நிலை குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை செய்திருந்தன.

இலங்கையின் வெகுஜன ஊடகங்கள், சர்வதேச ஊடக நிறுவனங்கள் இதுகுறித்த தகவல்களை வெளியிட்டிருந்தன. எனவே, இந்தச் சம்பவங்களையும், இந்தத் தகவல்களையும் ஆராயும்போது, இந்த பேரிடர் காலச் சூழ்நிலையில் ஆளும்தரப்பு செய்யத் தவறிய சில நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் இப்போது வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தபேரிடரிற்குப்பிந்தையஆளும்தரப்பின் நடத்தை ஓரளவு பாராட்டத்தக்க மட்டத்தில் உள்ளது. உதாரணமாக, உடமைகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு ஆளும்தரப்பு இழப்பீடு அங்கீகரிக்கும் விதம் பாராட்டுக்குரியது. ஆனால், ஏற்பட்ட இந்தப் பெரிய உயிர் இழப்பைக் குறைக்கத் தவறிய பாவம், இந்த நடவடிக்கைகளால் மறைக்கப்படாது. எனவே, வட்டகல கூறுவதைப் போன்று கைது செய்வதன் மூலமாகவோ அல்லது அரசுத் தலைவர் கூறியதுபோல அதைப் புறக்கணிப்பதன் மூலமாகவோ இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முடியாது.

அதேபோல், இப்போதுள்ள ஆளும்தரப்பு எதிர்க்கட்சியாக இருந்தபோது, அனர்த்த முகாமைத்துவம் குறித்து மிகவும் விஞ்ஞானபூர்வமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறது. வெள்ளம் அல்லது மழை வரும்போது, ஊடகவியலாளர் சந்திப்புக்களில், அத்தகைய தருணத்தை முன்கூட்டியே எவ்வாறு நிர்வகிப்பது? பேரிடர் நிகழும் தருணத்தை எவ்வாறு நிர்வகிப்பது? என்று அந்தக் காலத்தில் இருந்த ஆளும்தரப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கிய ஓர் அரசியல் குழுவாக இவர்கள் காணப்பட்டனர்.

அவ்வாறிருக்கையில் ஆட்சியமைத்த பின்னர் பேரிடர் முகாமைத்துவம் என்ற துறைக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் என்ன? முன்வைக்கப்பட்டுள்ள இரண்டு வரவுசெலவுத் திட்டங்களிலும் பேரிடர் முகாமைத்துவத்துக்கு வழங்கிய முக்கியத்துவம் என்ன? இந்தக் காரணிகள் குறித்தும் ஆளும்தரப்பு தகவல்களை வெளிப்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கும் நோக்கத்துடனேயே நாங்கள் இந்தத் தெளிவுபடுத்தல்களைக் கோருகின்றோம் - என்றார்.

## அம்பிட்டிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, தேரர் நீதிமன்றில்சமுகமளிக்காதநிலையில், வழக்கு தொடுநர்சார்பாக முற்பட்ட சட்டத்தரணி சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரையின்படி கைது செய்யப்பட்டிருக்க வேண்டிய தேரர் இதுவரைகைதுசெய்யப்படவில்லைஎன்பதை நீதவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதையடுத்து நீதிவான் அடுத்த வழக்கு தவணையான டிசெம்பர் 15க்கு முன்னர் தேரரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டமையுடன், தேரரை இதுவரை ஏன் கைது செய்யவில்லை என்று அறிக்கை வழங்குமாறும் கட்டளை பிறப்பித்தார்.

## இலங்கையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்கட்டமைப்பு வசதிகளை மீளமைத்து, மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்குத் தேவையான உதவிகளை பெற்றுத்தருமாறும் எதிர்க் கட்சித் தலைவர் ஆஸ்திரேலியா உயராணையரிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த இக்கட்டானகாலத்தில்ஆஸ்திரேலியா இலங்கைக்கு பெற்றுத் தந்த உதவிகள் மற்றும் நிவாரண சேவைகளுக்காக அனைத்து இலங்கையர்களின் சார்பாகவும் ஆஸ்திரேலியஆளும்தரப்பிற்கும்ஆஸ்திரேலிய மக்களுக்கும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதன்போது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

## கட்சிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புளொட் அமைப்பின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பு மற்றும் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் கேட்டபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தலுக்கு அப்பால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், மாற்றுக்கட்சிகளை ஆதரித்தவர்களின் மனவெளிப்பாடுகள் தொடர்பாக மக்கள் அதிருப்தியடைந்துள்ளதை நாங்கள் அறிந்து கொண்டதுடன் மக்களே எம்மை நோக்கி வருவதையும் நாம் அவதானித்து வருகின்றோம் .

இவ்வாறான சூழலில் அடுத்தகட்ட நகர்வுகளை மக்களின் தேவைகளை ஏற்ப முன்னெடுப்பதற்கு நாங்கள் முதலில் ஒன்றிணைய வேண்டும். குறிப்பாக தமிழ் தேசிய நிலைப்பாட்டில் இருக்கின்ற தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்ற மக்களின் விருப்பத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு எங்கள் ஒவ்வொருவரிடமும் உள்ளது.

அந்த வகையில் நாம் சந்திப்புகளில் ஈடுபடுகின்றோம். சந்திப்புகளின் போது ஒன்றிணைந்து செயற்படுவது

தொடர்ச்சி 6ம் பக்கம்....


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பேரிடர் நினைவூட்டிய பொறுப்புக்கள்

இலங்கை சமீபத்தில் எதிர்கொண்ட பேரிடர்—அதிக மழை, பெருவெள்ளம் மற்றும் மண்சரிவு—நூற்றுக்கணக்கான உயிர்களை காவுவாங்கி, ஆயிரக்கணக்கான மக்களை வீடில்லாதவர்களாக மாற்றியுள்ளது. பல மாவட்டங்களில் மக்கள் இன்னும் தங்குமிடங்கள் தேடி அலைகின்றனர்; பலர் தங்கள் வாழ்வாதாரத்தையே முழுவதுமாக இழந்துள்ளனர். பல குடும்பங்களே முற்றிலுமாகப் புதையுண்டு போயுள்ளன. இவ்வளவு பெரிய அழிவின் மத்தியில், ஒரு உண்மை மட்டும் தெள்ளத் தெளிவாகப் புலப்பட்டது. அது, பேரிடர் வருகின்றபோதில், மக்களிடையே ஒற்றுமை, கரிசனம் மற்றும் உதவும் உள்ளம் என்பன குறையவில்லை என்பதேயாகும்.

பேரிடரின் முதல் நிமிடங்களிலிருந்தே மக்கள் தாமாகவே உதவ முன்வந்த விதம் இலங்கை முழுவதும் பாராட்டுக்குரியது. அரசு அமைப்புகள் முழுமையாக இயங்கத் தொடங்குவதற்கு முன்பே, பொதுமக்கள் தாங்களாகவே களத்தில் குதித்திருந்தார்கள். பேரிடர் பகுதிகளுக்கு விரைந்து சென்றனர். சமூக ஊடகங்கள் வழியாக சற்றும் தயக்கமின்றி தொடர்பு கொண்டனர், குழுக்களை உருவாக்கினர், மாவட்டத்திலிருந்து மாவட்டம் பயணித்து உதவிப் பணிகளை தொடர்ந்து செய்தனர். இதுவே இலங்கையர்களின் உண்மையான வடிவம். பேரிடர் எத்தனை பெரியதாக இருந்தாலும், மக்களின் மனம் அதைவிட இன்னும் பெரியது என்பதை இந்த நிகழ்வுகள் மீண்டும் நிரூபித்தன. அது அரசியல் பிளவுகளும் அதிகார வெறியும் யாரால் உருவாக்கப்பட்டு மோதல்கள் விளைவுகளாகப் பெறப்படுகின்றன என்கிற கேள்வியையும் உருவாக்குகின்றது.

பேரிடர்களின் போது மக்கள் வெளிப்படுத்திய மனிதநேயத்துக்கு இணையாக இதே மக்களிடையே பதுங்கியுள்ள சில கேடுகெட்டவர்களையும் இந்தப் புயல் அடையாளம் காட்டத் தவறவில்லை. இலங்கை முழுவதும் சிதைந்து கொண்டிருக்கும்போது, சிலர் தங்களின் பேராசைக்காக பேரிடரையே ஒரு வாய்ப்பாக மாற்றிக் கொண்டிருந்தனர். உணவுப் பொருட்கள், குடிதண்ணீர் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை வாய்ப்பாக்கிக் கொண்டு அவற்றின் விலைகளை உயர்த்திக் கொள்ளை இலாபமடித்தனர். காலாவதியான உணவுப்பொருட்களைக்கூடச் சில இடங்களில் விற்றனர் என்று தகவல்கள் வெளியாகின. இத்தகைய செயல்கள் பேரிடர் தாக்கத்தை மேலும் தீவிரப்படுத்தின.

இந்நிலைமைக்குப் பின்னர், நுகர்வோர் அதிகார சபை (CAA) பல அவசர எண்களை அறிவித்ததும், சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டதும் முக்கியமான முன்னெடுப்புகளாகும். எனினும், இது பொதுவான பிரச்சினையொன்றை உணர்த்துகிறது: மக்கள் துன்புறும் நேரங்களில் அதனைத் தமது சுயநலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளும் கயவர்களும் இங்கேயே எம்முடனேயே வாழுகின்றனர் என்பதுதான் அது. இத்தகையவர்களின் செயற்பாடுகளைத் தடுக்க எதிர்காலத்தில் வலுவான கண்காணிப்பு அமைப்புகள் தேவைப்படுகின்றன.

மேலும் கவலையளித்த இன்னொரு பெரும் பிரச்சினை – பேரிடருக்குப் பிறகான வீட்டுக்கொள்ளை. வெள்ளம் மற்றும் மண் சரிவு அச்சம் காரணமாக மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலையில், சிலர் வாய்ப்பைப் பார்த்து வீடுகளில் புகுந்து பொருட்களைத் திருடினர். நாற்காலிகள் முதல் மின் சாதனங்கள் வரை, கிடைத்தவை எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது வெறும் சட்டவிரோதச் செயல் அல்ல; சமூக நெறிகளையும் மனிதநேயத்தையும் தரக்குறைவாக்கும் செயலும்கூட

பேரிடர் உதவி நடவடிக்கைகளில் ஈடுபட்ட சமூக ஊடக உள்ளடக்க உருவாக்குநர்கள் (influencers) முக்கிய பங்காற்றினர். மக்களிடமிருந்து நிதி திரட்டி, பொருட்களை விநியோகித்து, உதவிகள் விரைவாகச் சென்றடையச் செய்தனர். ஆனாலும், இவர்கள் பலர் எந்த உத்தியோகபூர்வத் தணிக்கைக்கும் கட்டுப்பாட்டுக்கும் இடமின்றிச் செயற்பட்டதால் வெளிப்படைத்தன்மை என்ற முக்கியக் கூறு சில நேரங்களில் குறைவாகவே இருந்தது. நன்கொடைகள் சேகரிப்பதில் ஈடுபடும் ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பை உணர்ந்து, ஒவ்வொரு ரூபாயும் எங்கே செல்கின்றது என்ற தகவலை தெளிவாக வெளியிட வேண்டியது அவசியம்.

பல இடங்களில் உதவிப் பொருட்கள் விநியோகிக்கும் போது ஏற்பட்ட மோதல்கள், வரிசைப் பிரச்சினைகள், உதவிப் பொருள்களைப் பெற்றவர்களிடமிருந்த அவற்றைப் பறித்துச் சென்றமை, உதவிக் குழுக்களுக்கு விடுத்த அச்சுறுத்தல்கள் போன்ற சம்பவங்களும் கவலைக்குரியவையே. பேரிடர் காலத்தில் ஒழுங்கும் பொறுப்பும் குறைபாடுகளாகத் தோன்றினால், அது எதிர்கால பேரிடர்களில் மேலும் பெரும் ஆபத்துக்குக் காரணமாகும்.

இப்போது இலங்கை தன்னை மீளுருவாக்கப் பணிகளில் முழுமையாக ஈடுபடுத்தவேண்டி இருப்பதால் இவையெல்லாம் குறித்தும்கூடக் கவனத்தில் எடுக்கப்படுவது அவசியம். இந்தப் பேரிடர் நமக்குக் கற்றுக் கொடுத்த பாடங்கள் பல. மக்களிடமிருந்து வெளிப்பட்ட கருணை, ஒற்றுமை, மனிதநேயம் போன்ற நல்லொழுக்கங்களை நாம் கொண்டாட வேண்டும். அதேநேரத்தில், பேராசை, கொள்ளை, தீங்கு விளைவிக்கும் வணிகச் செயல்கள், வெளிப்படைத் தன்மையின்மை போன்ற தவறுகளை வேரோடு அகற்றுவதற்கான சட்ட, நிர்வாக, சமூக முன்னெடுப்புகள் வலுப்படுத்தப்படவேண்டும்.

பேரிடர் வந்த பிறகு உதவுவது முக்கியம்; ஆனால் அதைவிட முக்கியமானது— பேரிடருக்கு முன்னே தயாராக இருப்பது. ஒவ்வொரு முறையும் பேரிடர் தாக்கும்போது, 'ஏன் நாம் மீண்டும் தயாரில்லாமல் இருந்தோம்?' என்ற கேள்வி எழுகிறது. இந்தக் கேள்வி இனி எழக் கூடாது. நாட்டின் பேரிடர் மேலாண்மை அமைப்புகள் வலுப்படுத்தப்பட வேண்டும்; பகுதி மட்டத்திலான முன்னெச்சரிக்கை திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்; மக்களுக்கு தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்படவேண்டும்.

இறுதியாக, இந்நாடு முன்னேறவேண்டுமெனில் ஒற்றுமையும் மனிதநேயமும் மட்டுமல்ல, பொறுப்பும் நேர்மையும் அவசியம். இந்த பேரிடர் அதை மீண்டும் நினைவூட்டியுள்ளது.

## நுவரெலியாவில் வீதி, பாலம் அமைக்க அரசுத் தலைவர் வழங்கிய அறிவுரை

நுவரெலியா மாவட்டத்தில் சில வீதிகள் மற்றும் பாலங்களை அமைக்கும் போது தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கைகளை அதிகாரிகள் கவனத்திற்கொள்ளவேண்டும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார அறிவுரை வழங்கியுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் வீதிகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை ஆராய்வது மற்றும் அதற்காக மேற்கொள்ளவேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடல் அரசுத் தலைவர் அநுரகுமார மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் நேற்று நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

'தித்வா' சூறாவளியால் நுவரெலியா மாவட்டத்தில் சேதமடைந்த அனைத்து வீதிகள் மற்றும் அவற்றை சீரமைக்க எடுக்கும் காலம் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. சாதாரண பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொண்டு திறக்க முடியாத வீதிகள் குறித்து அதிகாரிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்த அரசுத் தலைவர், இது தொடர்பாக அறிக்கையை வழங்குமாறு அதிகாரிகளிடம் கோரினார்.

அதற்கமைய நுவரெலியா மாவட்டத்தில் சேதமடைந்த வீதிகள், வடிகான்கள் மற்றும் பாதுகாப்பு மதில் சுவர்களைச் சீரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்துச் சீரமைப்பு நடவடிக்கைகளையும் நிறைவு செய்யுமாறும் அரசுத் தலைவர் அநுரகுமார அதிகாரிகளுக்கு மேலும் அறிவுறுத்தினார்.

## நாடாளுமன்றத்தை உடன் கூட்ட பிரதமரிடம் நாமல் வலியுறுத்து

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவுப் பேரழிவை எதிர்கொள்வதற்கான முயற்சிகள் குறித்து அவதானம் செலுத்தி நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு பிரதமர் ஹரினி அமரசூரியவிடம் வலியுறுத்தியுள்ளார்.

தனது 'எக்ஸ்' தளத்தில் இது தொடர்பாகப் பதிவிட்டுள்ள அவர், நிலையியற் கட்டளை 16-இன் கீழ் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு பிரதமரிடம் தான் உத்தியோகபூர்வமாகக் கோரிக்கை விடுத்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

மக்கள் முன்னெப்போதும் இல்லாத வகையில் துன்பப்படுகிறார்கள். கிராமங்கள் மண்சரிவுகளில் சிக்கியுள்ளன. வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன, குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன, குழந்தைகளிடம் உணவு, சுத்தமான நீர் இல்லை. நிலமையின் தீவிரத்தை அனைவரும் உணரவேண்டும்.

பாதிக்கப்பட்ட பலர் தற்காலிக முகாம்களில் வாழ்கின்றனர். வெள்ள நீர் வழிந்தோடாத பிரதேசங்களில் அவற்றில் நடந்து செல்ல வேண்டிய இன்னலை எதிர்கொண்டுள்ளனர். மழை குறைந்தவுடன் தங்கள் வீடுகள் அப்படியே இருக்குமா என்ற நிச்சயமற்ற தன்மையுடன் அவர்கள் இருக்கின்றனர்.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 2 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பல ஆயிரக்கணக்கானோர் பசி, நோய் மற்றும் நிச்சயமற்ற தன்மையுடன் போராடி வருகின்றனர்.

ஒவ்வொரு குடும்பமும் பாதுகாப்புடனும் கண்ணியத்துடனும் மீட்கப்படும் வரையும் உதவி பாதிக்கப்பட்ட ஒவ்வொரு சமூகத்தையும் சென்றடையும் வரை, ஆளும் தரப்பின் வாக்குறுதிகள் களத்தில் உண்மையான உதவியாக மாறுவதை நாடாளுமன்றம் கண்காணிக்க வேண்டும்.

அவை தொடர்பில் விவாதிக்க வேண்டும். உதவிகள் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். இப்போது நமது மக்களுடன் துணைநிற்பது அரசியல் அல்ல, அது நமது தார்மீகக் கடமையாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொத்மலை நீர்த்தேகத்திற்கு நவ. 27 மிக அதிக நீர் வரத்து

கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு வரலாற்றில் மிக அதிகளவு நீர் நவம்பர் 27 கிடைத்ததாகவும், எனவே கொத்மலை அணையைப் பாதுகாக்கும் நோக்கில் வழமையான முறைப்படி அறிவியல் பூர்வமாக வான்கதவுகள் திறக்கப்பட்டதாகவும் துறைசார் அதிகாரிகள் அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் தெரிவித்துள்ளனர்.

நுவரெலிய மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதன்போது நுவரெலியா மாவட்டத்தில் நீர்ப்பாசனக் கட்டமைப்பிற்கு ஏற்பட்ட சேதம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையினால் கொத்மலை நீர்த்தேக்கம் தொடர்பாக நாட்டில் பரவலாகப் பேசப்படும் கருத்துக்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அரசுத் தலைவர் கேட்டறிந்தார். கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு நவம்பர் 27 வரலாற்றில் மிக அதிக அளவு நீர் கிடைத்ததாகவும், கொத்மலை அணையைப் பாதுகாக்கும் நோக்கில் வழமையான முறைப்படி அறிவியல் பூர்வமாக வான்கதவுகள் திறக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

நுவரெலியா மாவட்டத்தில் 4,700 ஏக்கர் நெல் வயல்கள் சேதமடைந்துள்ளதாகவும், அதில் 500 ஏக்கர் வயல் நிலங்கள் தவிர, ஏனைய நெல் வயல் நிலங்களில் பெரும்போகத்தில் பயிற்செய்கை மேற்கொள்ள முடியும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கிற்கான காரணங்கள் குறித்து இதன்போது அரசுத் தலைவர் ஆராய்ந்தார்.

சட்டவிரோதக் கட்டடங்கள், கால்வாய்கள் குறுகியதாக மாறியிருப்பது மற்றும் கிரகரி வாவியின் மதகை அகலமாக்காமை என்பனவே இதற்குக் காரணமாக அமைந்ததாக அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட்டினர். இதற்குத் தீர்வாக, கிரகரி வாவியின் கண்காணிப்பு மற்றும் தொழில்நுட்ப சேவைகளை நீர்ப்பாசன திணைக்களத்திற்கு ஒப்படைக்கவும் பொருளாதாரச் செயற்பாடுகளை நகர சபையின் கீழ் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்குமாறு அரசுத் தலைவர் அநுரகுமார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

## இலங்கையின் மீட்சி குறித்து இந்தியத் தூதவருடன் பேச்சு

இலங்கையை மீட்டெடுப்பதிலும், மீளக்கட்டியெழுப்புவதிலும் இலங்கை இந்தியா இருநாடுகளும் எவ்வாறு ஒன்றிணைந்து பணியாற்றமுடியும் என்பது குறித்து இந்திய உயராணையர் சந்தோஷ் ஜாவும் அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்தும் ஞாயிறன்று விரிவாகக் கலந்துரையாடியுள்ளனர்.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கி பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பேரனர்த்தத்தை அடுத்து 'அயலகத்துக்கு முதலிடம்' எனும் கொள்கையின் பிரகாரம் இந்தியா மனிதாபிமான மற்றும் தொழில்நுட்ப ரீதியில் அடுத்தடுத்து பல்வேறு உதவிகளை வழங்கிவருகிறது.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை அயலுறவுத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்துக்கும் இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜாவுக்கும் இடையில் வெளிவிவகார அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின்போது நாட்டின் சமகால நிலவரம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதன்படி தற்போதைய நெருக்கடி நிலையில் 'ஒப்பரேஷன் சாகர் பந்து' எனும் திட்டத்தின்கீழ் எமது நெருங்கிய நண்பனும், அயல் நாடுமான இந்தியா தொடர்ச்சியாக வழங்கிவரும் உடனடி உதவிகளுக்கு இலங்கை ஆளும்தரப்பின் சார்பில் உயராணையர் சந்தோஷ் ஜாவிடம் எனது நன்றியை வெளிப்படுத்தினேன் என அமைச்சர் விஜித்த ஹேரத் அவரது 'எக்ஸ்' தளப் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதிலும், மீளக்கட்டியெழுப்புவதிலும் இருநாடுகளும் எவ்வாறு ஒன்றிணைந்து பணியாற்றமுடியும் என்பது பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அமெரிக்க உதவிப் பொருள்களுடன் பலாலியில் வந்திறங்கிய விமானம்







பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான மனிதாபிமான உதவிப்பொருட்களை ஏற்றிய அமெரிக்க விமானம் நேற்று யாழ். பலாலி சர்வதேச விமானநிலையத்தில் தரையிறங்கியது.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கி பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கைக்கு சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், வணிக நிறுவனங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

அதற்கமைய பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உடனடி உதவிகளை வழங்குவதற்கென அமெரிக்கா இலங்கையிலுள்ள சர்வதேச உதவி முகவரமைப்புக்கள் ஊடாக முதற்கட்டமாக 2 மில்லியன் டொலர்கள் நிதியுதவியை வழங்கியது.

அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டோரின் உயிர் காக்கும் நோக்கில் உடனடி உதவியாக 2 மில்லியன் டொலர்கள் நிதியை வழங்குவதாக அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் அறிவித்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் அவ்வுதவிகளின் அடுத்த கட்டமாக மனிதாபிமான உதவிப் பொருட்களை ஏற்றிய அமெரிக்க விமானம் நேற்று யாழ். பலாலி சர்வதேசவிமானநிலையத்தை வந்தடைந்தது.

அவ்விமானத்தில் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உதவிப் பொருட்கள் உள்ளடங்கியிருப்பதாகவும், மிகவும் சவாலான இத்தருணத்தில்இலங்கையுடன் தோளோடு தோள் நிற்கும் சகல தரப்பினருக்கும் தாம் நன்றி தெரிவிப்பதாகவும் பலாலி விமான நிலையத்தினால் விடுக்கப்பட்டுள்ளஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரும் நாட்களில் இடியுடன் மழை

தென்கீழ் பருவ பெயர்ச்சி காலநிலை வலுவடைந்துவருவதால்எதிவரும்தினங்களுக்கு நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடி மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்காரணமாகவடக்கு, வடமத்தியமற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிக மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறு மழைவீழ்ச்சி அதிகரிக்கும் பட்சத்தில் நீர்த்தேக்கங்களின் வான் கதவுகளை திறக்க வேண்டியேற்படும் என்பதால், தற்போது அவை சிறியளவில் திறந்து விடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் நேற்று திங்கட்கிழமை மாலை வரை 635 பேர் உயிரிழந்துள்ளதோடு, 192 பேர் காணாமல் போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவமத்தியநிலையம்தெரிவித்துள்ளது.

இதேவேளை 5,12, 123 குடும்பங்களைச் சேர்ந்த 1, 766, 103 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 5,325 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதோடு, 81, 163 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

எனினும்தற்போதுஇடைத்தங்கல்முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளோர் எண்ணிக்கை படிப்படியாகக் குறைவடைந்து வருகிறது. அந்த வகையில் 22, 218 குடும்பங்களைச் சேர்ந்த 69, 861பேர் 690 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

# ரூ. 400 மில்லியன் பெறுமதியான பொருள்களுடன் சீன விமானம்

## நேற்று கொழும்பை வந்தடைந்தது

பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் சுமார் 400 மில்லியன் ரூபா பெறுமதிவாய்ந்த 84 தொன் மனிதாபிமான உதவி நிவாரணப் பொருட்களை ஏற்றிய சீன விமானம் நேற்றைய தினம் கொழும்பை வந்தடைந்தது.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு பேரிடர்களில் சிக்கிப் பல நூற்றுக்கணக்கானோர்உயிரிழந்திருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப்பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில்இலங்கைக்குச் சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், வணிக நிறுவனங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

அதற்கமைய பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி முயற்சிகளுக்குப் பங்களிப்புச்செய்யும் வகையில் சீனா அரசு ஏற்கனவே ஒரு மில்லியன் டொலர் நிதியுதவியையும், 10 மில்லியன்ஆர்.எம்.பிபெறுமதியானஉதவிப்பொருட்களையும் வழங்கியுள்ளது.

அதுமாத்திரமன்றி சீனச் செஞ்சிலுவை சங்கத்தினால் இலங்கை செஞ்சிலுவை சங்கத்துக்கு 100,000 டொலர் உடனடி நிதியுதவியும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் மேலும் சுமார் 400 மில்லியன் ரூபா பெறுமதிவாய்ந்த 84 தொன்களுக்கு மேற்பட்ட மனிதாபிமான உதவிப்பொருட்களுடன் ஷங்காய் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட போயிங் 747 கார்கோ விமானம் நேற்று காலை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தை வந்தடைந்தது.

மேற்படி மனிதாபிமான நிவாரணப்பொருட்களில் வெள்ளத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவக்கூடிய உயிர்காக்கும் ஜக்கெட்கள், கூடாரங்கள், போர்வைகள், மெத்தை விரிப்புக்கள் என்பன உள்ளடங்குகின்றன.

நாட்டை வந்தடைந்த இவ்விமானத்தை வரவேற்பதற்கு துறைமுகங்கள் மற்றும் விமானசேவைகள் அமைச்சர் அநுர கருணாதிலக, பாதுகாப்புப் பிரதியமைச்சர் அருண ஜயசேகர மற்றும் இலங்கைக்கான சீனத்தூதுவர் சி சென்ஹொங் ஆகியோர் விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தனர்.

# பேராதனை பல்கலையை மேலும் பலமாக கட்டியெழுப்ப ஆளும்தரப்பு திடசங்கற்பம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தை முன்னரை விட மேலும் பலமாகவும், பாதுகாப்பாகவும், மீள் எழுச்சித் திறன் கொண்டதாகவும் கட்டியெழுப்ப ஆளும்தரப்பு தயாராக இருப்பதாகப் பிரதமர் கலாநிதி ஹரிணி தெரிவித்தார்.

2025 நவம்பர் 27 பல்கலைக்கழக வளாகத்தினுள் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பிரதிநிதிகள் மற்றும் பீடாதிபதிகளைச் சந்திப்பதற்காகப் பல்கலைக்கழகத்திற்கு அவர் ஞாயிறன்று வருகை தந்தார்.

இந்தப் பேரிடர் கல்விச் செயற்பாடு களுக்கும், மாணவர்களுக்கும், ஊழியர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்திய விதம் குறித்தும் பிரதமருக்கு விளக்கமளிக்கப்பட்டது. 110 இற்கும் அதிகமான கணினிகள், அத்தியாவசியமான ஆய்வுகூட உபகரணங்கள், பரீட்சை ஆவணங்கள் மற்றும் நான்கு பிரதான தகவல் தொழில்நுட்ப வழங்கிகள் (ரீளஷஸளஷ) ஆகியன அழிவடைந்துள்ளதாகவும், தொடக்கச் சேத மதிப்பீடு 6 பில்லியன் ரூபாயை விட அதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பேரிடரை அடுத்து மகாவலி ஆற்றங்கரையில் அமைந்திருந்த விடுதிகளில் இருந்து சுமார் 750 மாணவர்களை விரைவாக வெளியேற்றியமைக்காகப் பிரதமர் பாராட்டினைத் தெரிவித்தார். அத்துடன், நெருக்கடி காலத்தில் வளாகத்தில் தங்கியிருந்த சுமார் 11 ஆயிரம் மாணவர்கள் வெளிப்படுத்திய மன உறுதியையும் அவர் பாராட்டினார்.

அணுகல் மற்றும் தகவல் தொடர்பு கடுமையாகத் தடைப்பட்டிருந்த போதிலும், உணவு, நீர் மற்றும் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தமைக்காக இலங்கை இராணுவம், பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் உள்ளூர் நன்கொடையாளர்களுக்கும் அவர் தனது பாராட்டைத் தெரிவித்தார்.

கூட்டுப் பொறியியற் குழுவின் அறிக்கையின்படி, வெள்ளத்தால் சூழப்பட்ட பல்கலைக்கழகக் கட்டடங்கள் கட்டமைப்பு ரீதியாக உறுதியான நிலையில் இருக்கின்றன. ஆயினும், பல கட்டடங்களுக்கு அவசர திருத்தங்கள் தேவைப்படுகின்றன. டிசெம்பர் 15வரை கல்விச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், மீண்டும் இயல்பு நிலையை மீட்டெடுப்பது குறித்தும், கல்வி மற்றும் அன்றாட நடவடிக்கைகளில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கும் மேற்கொள்ளப்படவேண்டிய உடனடி நடவடிக்கைகள் குறித்தும் துணைவேந்தர் மற்றும் அவசர நடவடிக்கைகளுக்கான குழுக்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடல்களின்போது, உடனடி உதவி மற்றும் நீண்டகாலப் பாதுகாப்பு ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்தும் தொடர்ச்சியான அறிவுறுத்தல்களைப் பிரதமர் வழங்கினார்.

ஆளும்தரப்பின் உதவியை விரைவுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்திய பிரதமர், பேராதனையைப் பலமாகவும் பாதுகாப்பாகவும் மீள் எழுச்சித் திறன் கொண்டதாகவும் கட்டியெழுப்ப ஆளும்தரப்பு

# தமிழ்நாடு அரசின் உதவிக் கப்பல் நேற்று திருமலையை வந்தடைவு

இலங்கையில் 'தித்வா' புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கென தமிழ்நாடு மாநில அரசின் சார்பில் அனுப்பப்பட்ட 700 மெற்றிக் தொன் நிவாரண உதவிப் பொருட்களை எடுத்து வந்த இந்திய கடற்படை போர்க் கப்பல் கரியல் நேற்று திருகோணமலை அஸ்ரப் துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலை இறங்குதுறையில் வைத்து பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா, நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, மாவட்டச் செயலாளர் மற்றும் இலங்கைக்கான இந்தியாவின் யாழ். துணைத் தூதரக அதிகாரி சாய் முரளி ஆகியோரும் வரவேற்றனர்.

அதனை அடுத்து உலர் உணவுப் பொருட்கள், ஆடைகள், குடிநீர், மருந்துப் பொருட்கள் அடங்கிய 700 தொன் உதவிப் பொருட்கள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ராவிடம் துணைத் தூதர் சாய் முரளியினால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir

## கட்சிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாகவும், வடக்கு மாகாணசபை தேர்தல், புதிய அரசமைப்புத் தொடர்பாகவும் போசிவருகின்றோம் அடுத்த கட்டமாக தமிழ் தேசிய கட்சிகளை ஒன்றிணைந்து ஒரே குடையின் கீழ் செயற்படவேண்டும் என்ற நிலையை உருவாக்கவேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் .

நாங்கள் பிரிந்து நிற்பதால் எதையும் சாதிக்கப்போவதில்லை. நாங்கள் பிரிவது மாற்றுச் சக்திகளுக்கே சாதமாக மாறிவிடும் . தமிழ் மக்களின் கோரிக்கைகள் அரசியல் தீர்வு விடயங்கள் அடிபட்டுபோகும் நிலையை ஏற்படுத்திவிடும். எனவே இதற்கு நாங்கள் இடம்கொடுக்கக்கூடாது எமது ஒற்றுமையைதான் எமது மக்களும் சர்வதேச நாடுகளும் விரும்புகின்றன எனவே நாம் அதைநோக்கிய முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றோம் .

தற்போதைய ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு தேர்தல் காலத்தில் கூறிய வாக்குறுதிகளில் எதையாவுத செய்வார்களா என்றால்இதுவரைசெய்யாதவர்கள்இனிமேல் செய்வார்களா என்பதே பதில்

தேர்தலுக்காக் கூறியவை தேர்தலுடனே சென்றுவிட்டன. மாகாணசபைத் தேர்தல் விடயத்திலும் இதுவே நடக்கிறது. காலத்திற்கு காலம் காலத்தைக் கடத்துகின்ற செயற்பாட்டையேஇவர்கள்செய்துவருகிறார்கள். எனவேநாங்கள்தமிழ்த்தேசியக்கட்சிகள்ஒரே குடையின்கிழ்செயற்படுவதற்கானஅனைத்து முயற்சிகளையும் செய்துவருகின்றோம் - என்றார்.

## பேரிடரால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளில்ஈடுபடுவோருக்கும்இடைஞ்சலாகக் காணப்படும். எனவே முடிந்த வரை அப்பிரதேசங்களுக்குள் பிரவேசிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். மேலும்பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவை தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் 117 என்ற தொலைப்பேசி எண்ணின் மூலம் பேரிடர் முகாமைத்துவ மையத்துக்கு தெரிவிக்க முடியும்.

இதுவரையில் 117 என்ற தொலைபேசி எண்ணிற்கு ஒரு இலட்சத்துக்கு அதிகமான தொலைபேசி அழைப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. நாங்கள் அந்த ஒவ்வொரு அழைப்புகளுக்கும் பதிலுரைத்து உதவிப்பணிகளைமேற்கொண்டுவருகிறோம்.

கனமழை காரணமாக பாதிப்படைந்த எல்லா இடங்களிலும் மண் நிரம்பியுள்ளது. எனவேஎந்தநேரங்களிலும்விழிப்புடன்இருக்க வேண்டும், அதுமட்டுமன்றி சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட நேரங்களில் அவ்விடத்தைவிட்டு உடனடியாக வெளியேறுமாறும், உங்கள் வீடுகளை அதிகாரிகள் பார்வையிட்டு தகுந்த முடிவுகளை மீண்டும் அளிக்கும் வரையில் பொதுமக்கள் அப் பிரதேசங்களுக்கு செல்ல வேண்டாம் என்றும் கோருகின்றேன் - என்றார்.

## ஐ.நாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகளை வழங்குவதிலும், நாட்டை மீளக்கட்டியெழுப்புவதிலும் அவசியமான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக ஐ.நா வதிவிடப்பிரதிநிதி உறுதியளித்தார்.

அத்தோடுபாதிக்கப்பட்டமக்களுக்குஉதவும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் உடனடி உதவி நிதியத்தின் ஊடாக 4.5 மில்லியன் டொலர்கள்நிதியைஉடனடியாகவழங்குவதற்கு ஐ.நா. சபை தீர்மானித்திருப்பதாகக் கூறிய வதிவிடப் பிரதிநிதி, அந்நிதியுதவிக்கான காசோலையைஅமைச்சர்விஜித்தஹேரத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

அதேபோன்று தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்புக்கள் ஊடாக இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் உதவிகளில்உணவுப்பாதுகாப்பு, முறையான வீடு, தூய குடிநீர், கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும், இதுகுறித்து விரிவான மதிப்பாய்வு ஒன்றை மேற்கொள்வதற்காக மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் இருந்து 5 அதிகாரிகள் அடங்கிய குழு நாட்டை வந்தடைந்திருப்பதாகவும் மார்க் அன்ட்ரூ பிரான்சே இச்சந்திப்பில் எடுத்துரைத்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.12.2025இல் வெளியிடப்பெற்றது